## "1985க்குப் பின்னரான காலப் பகுதியில் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேரில் வரிகளின் பங்களிப்பு: பெறுமதிசேர் வரி அமுலாக்கமும் அதன் பங்களிப்பும் குறித்த ஓர் ஆய்வு"

**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MSF. Risla,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இன்று அனைத்து நாடுகளிலும் அவற்றின் அரசிறை வருமானத்தை தீர்மானிப்பதில் பிரதான மூலாதாரமாக வரி விதிப்பு இருந்து வருவதை அவதானிக்கலாம். இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேரில் வரிகளின் பங்களிப்பினை இனங்காண்பதனூடாக பெறுமதிசேர் வரி (VAT) அமுலாக்கத்தினையும் அதன் பொருளாதாரப் பங்களிப்பினையும் கண்டறிதல் ஆகும். மேலும், ஆய்வு முடிவானது இலங்கையின் மொத்த அரசிறை வருமானத்தில் வரி வருமானத்தின் முக்கியத்துவத்தினை மதிப்பிடல். மொத்த அரசிறை வருமானத்தில் நேரில் வரியான பெறுமதிசேர் வரியில் ஏற்பட்ட மாற்றங்களை கண்டறிதல் போன்ற துணை நோக்கங்களினூடாக அடையப்படுகின்றது

இலங்கையில் விதிக்கப்படுகின்ற பிரதான நேரில் வரிகளான கலால் வரிகள் (Excise Tax), பெறுமதிசேர் வரி (VAT) , இறக்குமதித் தீர்வை (Import Duties) என்பவற்றின் அடிப்படையில் அவற்றின் தன்மைக்கேற்ப காலத் தொடர் பகுப்பாய்வு, எளிய பிற்செலவு மாதிரி மற்றும் விவரணப் பகுப்பாய்வு என்பவற்றின் மூலம் மொத்த அரச செலவினத்தில் இவ்வரிகளின் பங்களிப்பு கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு இவ்வாய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிரதான நேரில் வரிகள் இலங்கையின் மொத்த அரச செலவினத்தில் நேர்க்கணிய ரீதியிலான தாக்கத்தினை செலுத்துகின்றன அத்தோடு, இலங்கையின் மொத்த வரி அரசிறையில் நேரில் வரியான பெறுமதிசேர் வரியானது அண்மைக் காலமாக பாரிய ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. இவ்வரியானது, பல்வேறுபட்ட மாற்றங்களினூடாக இலங்கையின் மொத்த அரச செலவினை ஈடுசெய்வதில் பங்களிப்பினை வழங்குகின்றது.

எனவே இலங்கையின் மொத்த அரச செலவினத்தை ஈடுசெய்ய வேண்டுமாயின், இலங்கையின் நேரில் வரி வருமானத்தின் பங்களிப்பினை அதிகரிப்பதோடு, அரச செலவினங்களைக் குறைத்து வரி வருமானங்களை அதிகரிப்பதனூடாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை குறைக்க முடியும். அத்தோடு, பெறுமதிசேர் வரியானது பொருளாதார வளர்ச்சிக்கு, பொருளாதார உறுதிப்பாட்டிற்கு மற்றும் பாதீட்டுப் பற்றாக்குறையில் (BTF) பங்களிப்புச் செய்வதோடு, இப் பெறுமதிசேர் வரியுடன் ஏனைய நேரில் வரிகளான கலால் வரிகள், இறக்குமதித் தீர்வைகள் என்பன இலங்கையின் அரச செலவினத்தை ஈடுசெய்வதில் சிறந்த வகையில் செயலாற்ற முடியும்.

**பிரதான சொற்கள்:** கலால் வரி, பெறுமதிசேர் வரி, இறக்குமதித் தீர்வை மற்றும் பாதீட்டுப் பற்றாக் குறை